SRI R. PONNAPPA NADAR : Sir, is there any proposal to bring in fresh legislation ?

THE HON SRI R. VENKATARAMAN : No, Sir.

தவணைக் கொள்முதல் திட்டத்தின் கீழ் வீடு ஒதுக்கீடு.

*187 **கேள்வி.—திரு. மு. கருணாநிதி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னையிலுள்ள வீட்டு வசதிக் கழகம் ஆகஸ்டு 64 முடிய, பொது மக்களுக்குத் தவணை முறையில் கொடுப்பதற்காகக் கட்டிய வீடுகள் எத்தனை ?

(இ) தவணை முறையில் வீடுகளைக் கொடுப்பதில் உள்ள குறைகள் குறித்து அரசாங்கத்திற்கு ஏதேனும் புகார் வந்துள்ளதா ?

(உ) ஆம் எனில், அந்தப் புகாரின் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) அத்தகைய வீடுகள் 1,856 ஆகும்.

(இ) இல்லை.

(உ) இக் கேள்விக்கு இடம் இல்லை.

வட சேலத்தில் தொழில்கள் துவங்குதல்

*188 **கேள்வி.—திரு. ம. கமலநாதன் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அண்மையில் சேலத்தில் நடைபெற்ற கைத்தொழில் வளர்ச்சி கருத்தரங்கில் வட சேல மாவட்டத்தில் என்னென்ன தொழில்கள் ஆரம்பிக்க சிபாரிசு செய்யப்பட்டுள்ளது ?

(இ) அவைகளில் அரசினர் பரிசீலனையில் உள்ள புதிய தொழிற் சாலைகள் யாவை ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) & (இ) சேலத்தில் அண்மையில் நடைப்பெற்ற தொழிற் கருத்தரங்கில் பல்வேறு கனரக நடுத்தர, சிறிய தொழிற்சாலைகள் சேலம் மாவட்டத்தில், நிறுவுவதற்குச் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. சிபாரிசு செய்யப்பட்ட தொழிற்சாலைகள் எங்கெங்கு நிறுவுவது என்பது குறித்து ஆராய்வதற்கு ஒரு குழு கலெக் டரால் அங்கே அமைக்கப்படவிருக்கிறது.

திரு. ம. கமலநாதன் : சேலம் மாவட்டத்திற்கு ஒரு தனிப் பெருமை தருவது பழவகைகள் மிக அதிகமாகக் கிடைக்கிறது எனபதுதான். 45,000 மாம்பழமும், 47,000 டன்கள் வாழையும் 2,800 டன்கள் புளியும் அங்கே இருப்பதால், அமெரிக்கக் கூட்டுறவுடன் ஒரு பெரிய "ப்ரூட் கானிங் இன்டஸ் டிரி" நிறுவ வாய்ப்பு இருக்கிறதென்று அறிகிறேன். அப்படி ஒரு பெரிய தொழில்சாலையை கிருஷ்ணகிரியில் அமைக்க அரசினர் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தவிதமான "ப்ரூட் கானிங் இன்டஸ்டிரி" இப்போது கிருஷ்ணகிரி தொழிற்பேட்டையில் அமைக்கத் தனி யார் துறையில் முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறார்கள். அதற்கு வேண் டிய எல்லா உதவியையும் செய்வதாகச் சர்க்கார் அவர்களுக்கு வாக்களித்து இருக்கிறது.

திரு. ம. கமலநாதன் : அமைச்சர் தனியார் துறையில் அமைக்கப்பட இருக்கும் "ப்ரூட் கானிங் இன்டஸ்ட்ரி" பற்றிச் சொன்னார்கள். அது "ஸ்மால் ஸ்கேல் இன்டஸ்ட்ரி" 5 லட்சம் ரூபாய் முதலீட்டில் ஆரம்பிக்கப்பட இருக்கிறது. "டிஹைட்ரேடெட்" வகையில் தயாரிக்கப்படுவதற்கு ரூ. 50

9th March 1965]

லட்சத்திற்குக் குறையாத முதலீடு செய்தால் அமைக்க முடியும் என்று தொழில் கருத்தரங்கிலே கருத்து தெரிவிக்கப்பட்டது. அதற்கு அமெரிக்க கூட்டுறவு தேவை என்பதால் அரசாங்கம் இதற்கு ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அந்தவிதமாகத்தனியார் துறையில் யாராவது முயற்சி எடுத்துக் கொண்டு முன் வந்தால் சர்க்கார் பரிசீலனை செய்யும்.

Consultation before issue of licences

* 189 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to consult the Council of Scientific and Industrial Research before issuing licences for industries ?

THE HON. SRI R. VENKATARAMAN : The Government of India are the competent authority to grant licences under the Industries (Development and Regulation) Act, 1951. This Government do not have information whether the Government of India have any proposal to consult the Council of Scientific and Industrial Research or any other organization before issuing licences.

Pond Works (Erode taluk)

* 190 *Q.*—SRI A. K. SUBBIAH : Will the Hon. the Minister for Home be pleased to state with reference to the answer given to question No. 531 on 23rd July 1962, the present stage of the following pond works in Erode taluk of Coimbatore district :—

(1) Pond near Vattalapathy village,

(2) Pond near Neelagoundenpalayam,

(3) Pond near Karumanjarai ?

கனம் திரு. பூ. கக்கன் : அவை சென்னை (உணவு உற்பத்தி) மேற் பார்வைப் பொறியாளரின் ஆலோசனையில் இருக்கின்றன.

திரு. ஆ. கு. சுப்பையா : 1962-லேயே மராமத்து வேலை செய்து கொடுக்கப்படுமென்று அமைச்சர் கூறியிருக்கிறார்கள். இந்தப் பரிசீலனை எத்தனை ஆண்டுகளில் முடியும் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : இந்த "பாண்ட் ஸ்கீம்" கோவை, சேலம் ஜில்லாக்களிலே பெரும் பகுதி செய்யப்பட்டு இருக்கிறது. அரசாங்கம் பரி சீலனை செய்து இப்போது துரிதமாக வேலைகளை எடுக்க வேண்டுமென்று திட்டமிட்ட காரணத்தினாலே இந்த மூன்று இடங்களிலே இதைச் செய்ய வேண்டுமென்று ஏற்பாடு செய்திருக்கிறார்கள். கலெக்டருடையவும், சீப் என்ஜினியருடையவும் அங்கீகாரம் பெற்ற பிற்பாடு வேலைகள் துவங்கப் படும்.

Hostels for Harijan students

* 191 *Q.*—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Home be pleased to state the number of Harijan students' hostels constructed in the State during 1964–65?

THE HON. SRI P. KAKKAN : No building for Government Hostel for Harijans has been constructed during 1964–65. However the Government have sanctioned the construction of buildings